www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

S

# மாதத் தேர்வு - 2024

## பத்தாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி தமிழ் மதிப்பெண்கள்: 50

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **3×1=3**

1) எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் ________
அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா
இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா

2) 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

3) காசிக்காண்டம் என்பது ________
அ) காசிக் காண்டத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறு பெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும். **3×1=3**

உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்
செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகாந்த
அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி
முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே

4) இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?
அ) கனிச்சாறு ஆ) முல்லைப்பாட்டு
இ) காற்றேவா ஈ) காசிக்காண்டம்

5) இப்பாடல் அடியில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்கள் ________
அ) அந்தும்மா, அதுபோல ஆ) உந்தி, செந்தா
இ) முந்துற்றோம், யாண்டும் ஈ) உந்தி, உணர்வெழுப்ப

6) இப்பாடலின் ஆசிரியர் ________
அ) பாரதியார் ஆ) பெருஞ்சித்திரனார் இ) தமிழழகனார் ஈ) நப்பூதனார்

**II.** எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:- **4×2=8**
(வினா எண்.11 கட்டாய வினா)

7) வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
8) வசன கவிதை குறிப்பு வரைக.
9) பெற்றோர் வேலையிலிருந்து திரும்ப தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.
10) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
11) பல்லார் ..... எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**III.** எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **4×2=8**

12) பழமொழிகளை நிறைவு செய்க
அ) உப்பில்லாப் ________ ஆ) விருந்தும் ________
13) இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) வளி-வாளி ஆ) தொடு - தோடு
14) உரைத்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



15) தொடர்களில் உள்ள வண்ணச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.
<u>சோலையிற்</u> பூத்த, மணமலர்களில் <u>சுரும்புகள்</u> மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன

16) சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க
அ) நாலெழுத்தில் கண்சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும்
ஆ) இருக்கும்போது உருவமில்லை - இல்லாமல் உயிரினம் இல்லை

## IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (வினா எண். 20 கட்டாயமாக விடையளிக்கவும்) 3×3=9

17) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

18) புலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ - வினவுவது ஏன்?

19) வேலோடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலோடு நின்றான் இரவு - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக

20) தென்னன் மகளே எனத் தொடங்கும் பெருஞ்சித்திரனார் பாடல் (அல்லது) சிறுதாம்பு ......... எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடல்

## V. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 3×3=9

21) அ) மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. (அல்லது)

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

22) தமிழ்வேள் தன் தந்தை இராமசாமி அவர்களிடம் நூலகத்தில் உறுப்பினராக வேண்டினான். அவரும் தமிழ்வேளிடம் 500 ரூபாயும், 15, பாரதி தெரு, திருச்சிராப்பள்ளி மாவட்டம் என்ற முகவரியிட்ட அடையாளச் சான்றையும் கொடுத்தார். கிளை நூலகத்திற்குச் சென்ற தமிழ்வேளாக தேர்வர் தன்னைக் கருதி நூலக உறுப்பினர் படிவத்தைப் பூர்த்தி செய்க.

23) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



## VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:- 2×5=10

24) தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை விரிவாக எழுதுக.

25) அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க

26) 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

********

Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com